# முதன்மை மாவட்ட நீதிமன்றம், இராமநாதபுரம்.

**Ar.OP. No. 18/2021**

**ம.சா. 1**

நாள்: 01.11.2023 .

2023ம் ஆண்டு நவம்பர் திங்கள் 01ம் நாள் மனுதார்/எதிர்மனுதார் சாட்சியாகிய திரு. வரதராஜன் என்பவரின் வாக்குமூலம் 1989ஆம் ஆண்டு சட்டம் 44ம் விதி 4ம் பிரிவின்கீழ் திரு. எஸ். குமரகுரு, பி.எல்., ஆகிய என்னால் ஆணையிடப்பட்டு உறுதி கூறப்பட்டு பிரமாணம் செய்யப்படுகிறது.

| | | | |
|---|---|---|---|
| பெயர் | வரதராஜன் | ஜாதி | |
| தந்தை பெயர் | | தொழில் | |
| கிராமம் | | சமயம் | |
| தாலுகா | | வயது | |

<u>முதல் விசாரணை:</u>

நான் இம்மனுவில் மனுதாரர். எனது முதல் விசாரணை சாட்சியத்தை நிரூபண வாக்குமூலமாக தயார் செய்து தாக்கல் செய்கிறேன். அதில் உள்ள விபரங்கள் எனது தகவலின் பேரில் தயார் செய்யப்பட்டு அதை நான் படித்து பார்த்து கையெழுத்து செய்துள்ளேன். மனுப்படி உத்தரவாக வேண்டுகிறேன்.

<u>ஆவணங்கள்</u>

1) புல எண். 202/1B2 மனுதாரர் பெயரில் ஏற்பட்டுள்ள பட்டா கணினி நகல் ம.சா.ஆ.1,
2) 16.06.2010ல் ஜெயபால் என்பவருக்கு சாத்தையா என்பவர் எழுதிக்கொடுத்து பதிவு செய்யப்பட்ட கிரையப்பத்திரம் சான்றிட்ட நகல் ம.சா.ஆ.2,
3) 14.09.2012ல் உமாமகேஸ்வரிக்கு வரதராஜன் எழுதிக்கொடுத்த கிரையப்பத்திரம் ஆன்லைன் காப்பி ம.சா.ஆ.3,

4) 17.06.2010 ல் மோகன் குமார் என்பவருக்கு கர்ணன் என்பவர் எழுதிக்கொடுத்த கிரையப்பத்திரம் ஆன்லைன் காப்பி ம.சா.ஆ.4,

5) 29.12.2011 ல் கவிதா என்பவருக்கு மோகன்குமார் எழுதிக்கொடுத்து பதிவு செய்யப்பட்ட கிரையப்பத்திரம் ஆன்லைன் காப்பி ம.சா.ஆ.5,

6) 17.02.2023 ல் தகவல் அறியும் உரிமைச்சட்டத்தின் கீழ் மனுதாரருக்கு வந்த அறிவிப்பு அசல் ம.சா.ஆ.6 ஆக குறியீடு செய்யப்படுகிறது. (ம.சா.ஆ.6 ஆனது ஆட்சேபனையின் பேரில் குறியீடு செய்யப்படுகிறது )

மனுப்படி உத்தரவாக வேண்டுகிறேன்.

கு.வி.

எதிர்மனுதாரர் தரப்பு வழக்கறிஞர் வேண்டுகோளுக்கிணங்க குறுக்கு விசாரணை ஒத்திவைக்கப்படுகிறது.

ஒப்பம்/எஸ். குமரகுரு, ,
முதன்மை மாவட்ட நீதிபதி,
இராமநாதபுரம் .